பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

முன்னுரை 25

1 நல்ல மனைவியிடம் இருக்க வேண்டிய பண்புகள் குறித்து அந்நிஸா அத்தியாயத்தில் வந்துள்ள வசனம் 31

2 விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் நல்ல மனைவி விலகியிருக்க வேண்டும் 37

3 ஸுனன் பைஹகீயில் வந்துள்ள சிறந்த பெண் குறித்த நபிமொழி 44

4 செலவுக்கு அதிகம் தரச் சொல்லி கணவனுக்குச் சிரமம் கொடுக்காத பண்புள்ளவர் நல்ல மனைவி 52

5 உபகாரம் புரிந்தவர்களின் உபகாரத்தை மறுக்காத பண்புள்ளவள் நல்ல மனைவி 55

6 கணவனைக் கண்ணியப்படுத்துவதும் அவனின் மதிப்பையும் அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் அறிவதும் நல்ல மனைவியின் பண்பு 57

7 பெற்ற பிள்ளைகளிடம் நீதமாக நடக்கின்ற பண்புள்ளவர் நல்ல மனைவி 60

8 வீட்டிற்குள்ளேயே இருக்கின்ற பண்புள்ளவர் நல்ல மனைவி 61

9 இல்லற வாழ்வின் இரகசியங்களை வெளியே பரப்பாமல் இருக்கும் பண்புள்ளவர் நல்ல மனைவி 62

1

நல்ல மனைவியிடம் இருக்க வேண்டிய பண்புகள் குறித்து அந்நிஸா அத்தியாயத்தில் வந்துள்ள வசனம்

❀

ஆரம்பமாக நான் கூறப்போவது அந்நிஸா அத்தியாத்தில் நல்ல மனைவியின் இலக்கணங்கள் குறித்து வந்துள்ள வசனமாகும். அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

فَالصَّالِحَاتُ قَانِتَاتٌ حَافِظَاتٌ لِلْغَيْبِ بِمَا حَفِظَ اللَّهُ

'ஆகவே, நல்லொழுக்கமுள்ள பெண்கள் (அல்லாஹ்வுக்கும் தங்கள் கணவனுக்கும்) பணிந்தே நடப்பார்கள். (தங்கள் கணவன்) மறைவாக உள்ள சமயத்தில் அல்லாஹ்வின் பாதுகாப்பைக் கொண்டு (தங்களையும் கணவனின் மற்ற பொருள்களையும்) பேணிக் காத்துக்கொள்வார்கள்.' *(4:34)*

இது நீண்ட வசனத்தின் ஒரு பகுதியே. இத்தலைப்பில் நாம் பேச வுள்ள அனைத்தையும் இது உள்ளடக்கியதாகும். நல்ல மனைவிக்கு இருக்க வேண்டிய சிறப்பு மிக்க பண்பு இதில் கூறப்பட்டுள்ளது. நல்ல மனைவியிடம் இரண்டு பண்புகள் ஒருங்கே அமையப் பெற்றிருக்க வேண்டும் என்று இந்த வசனம் நமக்குச் சொல்லித் தருகிறது. முதல் பண்பு, அவளின் இரட்சகனோடு உள்ள அவளின் தொடர்பு குறித்தது. இரண்டாவது பண்பு, அவளின் கணவனோடு உள்ள அவளின் தொடர்பு குறித்தது.

அவளின் இரட்சகனோடு அவள் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதையே 'பணிந்தே நடப்பார்கள்' என்று கூறப்பட் டுள்ளது. இதற்குக் குர்ஆனில் 'கானிதாத்' என்ற பதம் ஆளப்பட் டுள்ளது. இது 'குனூத்' என்ற வேர்ச்சொல்லில் இருந்து பிறந்தது. இதன் பொருளாவது, அல்லாஹ்வின் வழிபாட்டிலேயே நிலைத்தி ருப்பது, அவனை வணங்குவதில் பேணுதலாக இருப்பது, அவனு

2

விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் நல்ல மனைவி விலகியிருக்க வேண்டும்

❀

நல்ல மனைவியிடம் இருக்க வேண்டிய இரண்டாவது பண்பு, அவள் விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் விலகியிருக்க வேண்டும். உலக வாழ்வில் ஷைத்தானின் முக்கிய நோக்கம், கலகம் விளைவிப்பதே. மார்க்கத்திலும் குணங்களிலும் கொடுக்கல் வாங்கலிலும் குடும்ப வாழ்விலும் சகோதரர்களுக்கு இடையேயும் அனைத்து நன்மையான காரியங்களிலும் குழப்பம் ஏற்படுத்துவதே அவனுடைய நோக்கமாகும். அவனது இந்த நோக்கங்களைச் செயல்படுத்த ஒவ்வொரு நாளும் படைகளை அனுப்புவான்.

ஸஹீஹ் முஸ்லிம் நபிமொழித் தொகுப்பில் வந்துள்ள ஒரு நபிமொழியை என்னோடு சேர்ந்து நீங்களும் சிந்தனை செய்யுங்கள். நபி ﷺ அவர்கள் கூறியதாக ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ﷺ அறிவிக்கிறார்கள்:

إِنَّ إِبْلِيسَ يَضَعُ عَرْشَهُ عَلَى الْبَحْرِ ثُمَّ فَيَبْعَثُ سَرَايَاهُ فَيَفْتِنُونَ النَّاسَ فَأَعْظَمُهُمْ عِنْدَهُ مَنْزِلَةً أَعْظَمُهُمْ فِتْنَةً, يَجِيءُ أَحَدُهُمْ فَيَقُولُ: فَعَلْتُ كَذَا وَكَذَا, فَيَقُولُ: مَا صَنَعْتَ شَيْئًا, ثُمَّ يَجِيءُ أَحَدُهُمْ فَيَقُولُ: مَا تَرَكْتُهُ حَتَّى فَرَّقْتُ بَيْنَهُ وَبَيْنَ امْرَأَتِهِ, قَالَ: فَيُدْنِيهِ مِنْهُ وَيَلْتَزِمُهُ وَيَقُولُ: نِعْمَ أَنْتَ

‘இப்லீஸ் தனது ஆட்சிக்கட்டிலைத் தண்ணீரின்மீது அமைத்து, பிறகு தன் படைகளை (பூமியில் குழப்பம் விளைவிக்க) அனுப்பு கிறான். அப்போது அவனுடைய படைகளில் அவனுக்கு மிக நெருக்கமானவன் யாரெனில், (மக்களுக்கிடையே) மிக அதிகமாக குழப்பம் ஏற்படுத்தியவனே ஆவான். அந்தப் படையினரில் ஒருவன் (இப்லீஸிடம்) வந்து, ‘நான் இன்னின்னவாறு செயல் பட்டேன்’ என்று கூறுவான். அதற்கு இப்லீஸ், ‘நீ எதையும்

5

உபகாரம் புரிந்தவர்களின் உபகாரத்தை மறுக்காத பண்புள்ளவள் நல்ல மனைவி

❀

நல்ல மனைவியின் பண்புகளில் இன்னொன்று, உபகாரம் புரிந்தவர் களின் உபகாரத்தை மறுக்காமலிருப்பதாகும். அதாவது, அவளது கணவனின் மூலம் அல்லாஹ் அவளுக்கு இலகுவாக்கிக் கொடுத் துள்ள உபகாரத்தை மறுக்கக் கூடாது.

مَنْ لَمْ يَشْكُرِ النَّاسَ لَمْ يَشْكُرِ اللَّهَ

'மனிதர்களுக்கு நன்றி கூறாதவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி யவனாக ஆகமாட்டான்' (அறிவிப்பு: அபூ ஸயீது ﷺ, திர்மிதீ 1955, ஸஹீஹ் ஜாமிஃ 6541) என்பதாக நபிமொழியில் வந்துள்ளது.

இதுகுறித்து இமாம் புகாரீ ﷺ அவர்கள் அல்அதபுல் முஃப்ரது என்ற தங்களது தொகுப்பில் ஒரு நபிமொழியைப் பதிவு செய்கிறார்கள். அஸ்மா பின்த் யஸீது அன்ஸாரிய்யா ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

مَرَّ بِي رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيهِ وسَلَّمَ وَأَنَا فِي نِسْوَةٍ، فَسَلَّمَ عَلَيْنَا ثُمَّ قَالَ إِيَّاكُنَّ وَكُفْرَ الْمُنْعِمِينَ قُلْتُ وَمَا كُفْرُ الْمُنْعِمِينَ قَالَ لَعَلَّ إِحْدَاكُنَّ أَنْ تَطُولَ أَيْمَتُهَا بَيْنَ أَبَوَيْهَا وَتَعْنُسُ ثُمَّ يَرْزُقُهَا اللهُ زَوْجًا فَيَرْزُقُهَا مِنْهُ مَالاً وَوَلَدًا فَتَغْضَبُ الْغَضْبَةَ فَتَكْفُرُ بِهَا فَتَقُولُ مَا رَأَيْتُ مِنْكَ مَكَانَ يَوْمٍ بِخَيْرٍ قَطُّ

நான் எனது வயதொத்த தோழிகளுக்கு அருகில் இருக்கும்போது நபி ﷺ அவர்கள் என்னைக் கடந்து சென்றார்கள். அப்போது நபியவர்கள் எங்களுக்கு ஸலாம் கூறிவிட்டு, 'உபகாரம் செய்த வர்களுக்கு நன்றிகெட்டத்தனமாக நடப்பதை விட்டும் உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன்' என்று கூறினார்கள். பெண்மணிகளில் நபியவர்களிடம் கேள்வி கேட்பதில் துணிச்சல் மிக்க பெண்ணாக நான் இருந்தேன். அப்போது நான், 'அல்லாஹ்வின் தூதரே!

7

பெற்ற பிள்ளைகளிடம் நீதமாக நடக்கின்ற பண்புள்ளவர் நல்ல மனைவி



நல்ல மனைவியின் பண்புகளில் இன்னொன்று, அல்லாஹ் அவளுக்கு உபகாரம் புரிந்து, குழந்தைகளைக் கொடுத்து அவளைக் கண்ணியப்படுத்திவிட்டால் அவர்களுக்கிடையே நீதத்தோடு நடந்துகொள்ள வேண்டும். நபி ﷺ அவர்கள்,

اعْدِلُوا بَيْنَ أَوْلَادِكُمْ، اعْدِلُوا بَيْنَ أَوْلَادِكُمْ

'உங்களின் பிள்ளைகளுக்கிடையே நீதமாக நடந்துகொள்ளுங்கள்; உங்களின் பிள்ளைகளுக்கிடையே நீதமாக நடந்துகொள்ளுங்கள்' என்று (இருமுறை) கூறினார்கள். (அறிவிப்பு: நுஃமான் இப்னு பஷீர் ؓ, அபூ தாவூது 3544, ஸஹீஹா 1240)

இக்கருத்தில் ஏராளமான நபிமொழிகள் வந்துள்ளன.

9

இல்லற வாழ்வின் இரகசியங்களை வெளியே பரப்பாமல் இருக்கும் பண்புள்ளவர் நல்ல மனைவி

❀

நல்ல மனைவியின் பண்புகளில் ஒன்று, கணவனின் இரகசியத்தை யும் கணவன் மனைவிக்கிடையேயுள்ள பிரத்தியேகமான காரியங் களையும் பரப்பாமல் இருப்பது. ஆகவே, தம்பதியர் தனிமையில் இருந்து, அவர்கள் இருவருக்கும் உடன்பாடு ஏற்படாவிட்டால் அது விசயத்தில் அவ்விருவரும் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ள வேண்டும். அஸ்மா பின்த் யஸீது ﵂ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

أَنَّهَا كَانَتْ عِنْدَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم وَالرِّجَالُ وَالنِّسَاءُ قُعُودٌ عِنْدَهُ، فَقَالَ: لَعَلَّ رَجُلاً يَقُولُ مَا يَفْعَلُ بِأَهْلِهِ، وَلَعَلَّ امْرَأَةً تُخْبِرُ بِمَا فَعَلَتْ مَعَ زَوْجِهَا، فَأَرَمَّ الْقَوْمُ. فَقُلْتُ: إِى وَاللَّهِ يَا رَسُولَ اللَّهِ، إِنَّهُنَّ لَيَقُلْنَ، وَإِنَّهُمْ لَيَفْعَلُونَ، قَالَ: فَلاَ تَفْعَلُوا، فَإِنَّمَا مِثْلُ ذَلِكَ مِثْلُ شَّيْطَانِ لَقِىَ شَيْطَانَةً فِى طَرِيقٍ، فَغَشِيَهَا وَالنَّاسُ يَنْظُرُونَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் முன்னிலையில் நான் இருந்தேன். ஆண்களும் பெண்களும் நபியவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள். அப்போது நபியவர்கள், 'ஓர் ஆண் தன் மனைவியிடம் நடந்துகொண்டதைப்பற்றிச் சொல்லக்கூடும். ஒரு பெண் தன் கணவனோடு நடந்துகொண்டதைப்பற்றி அறிவிக்கக் கூடும்' என்று கூறினார்கள். அப்போது கூட்டத்தினர் அமைதியாக இருந்தார்கள். அப்போது நான் 'அல்லாஹ்வின் தூதரே! அல் லாஹ்வின்மீது சத்தியமாக, திட்டமாகப் பெண்களும் அவ் வாறு சொல்கிறார்கள். திட்டமாக ஆண்களும் அவ்வாறு செயல் படுகிறார்களே?' என்று கேட்டேன். அப்போது நபியவர்கள் கூறினார்கள். 'அவ்வாறு செய்யாதீர்கள். அவ்வாறு செய்பவனுக்கு உதாரணம் மக்கள் பார்த்துக்கொண்டிருக்க ஒரு தீய வேலையைச்